சிவமயம்

gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஸூ ஆடிமீ ககவ (1946 ஜூலை 26 வெள்ளிக்கிழமை) [இல கூஉ

# பகல் வேஷக்காரர்!

## ஒழுக்கம் கெட்ட தேசாபிமானிகள் அவர்கள் மனிதரிற் கீழான பிறவிகளே!

### மகாத்மாஜியின் வியாக்கியானம்

"பகல் வேஷம்போடும் ஆஷாடபூதிகள்" என்னும் தலையங்கத்துடன் மகாத்மாகாந்தி ஓர் கட்டுரையை எழுதியுள்ளார். அது பின்வருமாறு:

"எனக்கு ஓர்பெண் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறாள். அது மிகவும் பரிதாபகரமானது. காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு, எத்தனையோபேர் சகலவித அட்டூழியங்களையும் செய்துவருவது சகிக்கமுடியாமலிருக்கிறது (மகாத்மா இக்கடிதங்களுள் ஒன்றை அப்படியே வெளியிட்டு மேலும் கூறுவதாவது.) காங்கிரஸ் வாதிகளிற் சிலர் பெண்கள் விஷயமாக மிகவும் கேவலமுறையில் நடப்பதை நான் பலமாகக் கண்டிக்கின்றேன். காங்கிரஸ்வாதிகள் என்றால் தேசபக்தர்கள் என்று அர்த்தம்; அகிம்ஸையைக் கடைப்பிடிப்பவர்கள் என்று அவர்கள்மீது பொதுமக்கள் ஓர் தனிமதிப்பு வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவர்கள் ஒழுக்கத்தில் தலைசிறந்து இருத்தல் வேண்டும். மற்றவர்களுக்கு வழிகாட்டியாயிருக்கும் "தேசாபிமானிகள்" தங்களுடைய லௌகீக விஷயத்தில் மாசற்றவர்களாக விருத்தல்வேண்டும், வெளியில் காந்திக் குல்லா அணிந்து, அகிம்சையைப்பற்றிப் பேசிவிட்டு, இரகசியமாக அட்டூழியங்கள் செய்யவொண்ணாது. அப்படியவர்கள் செய்வார்களானால் மனிதர்களில் மிகவும் கீழப் பிறவிகளாகவே கருதப்படுவர் என்பது திண்ணம்."

## குற்றமே வியாதி

### கல்வி மந்திரியின் விளக்கம்

மத்துகமையில் பாடசாலைக் குழந்தைகளும் அவர்களுடைய பெற்றோர்களுமடங்கிய பெரிய கூட்டமொன்றில் சுகாதாரமந்திரி திரு டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா பேசியபொழுது பின்வருமாறு கூறினர்:

"சுகாதார சம்பந்தமான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. சுகாதார பழக்கவழக்கங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. சுகாதார காட்சிகள் பாடசாலைகளால் நடத்தப்படுகின்றன. ஆனால், இந்தப் பகுதியில் குற்றம் அதிகரித்திருக்கிறது. குற்றமென்ற வியாதிதான் இப்பகுதியை வெகுவாகப்பீடித்துள்ளது சுகாதாரம் மோசமாயிருப்பதால்தான் குற்றங்கள் அதிகரிக்கின்றனவென்று சொல்லலாம். சுகாதாரம் குற்றங்களைக் குறைக்கக்கூடும். பாடசாலைகள்மூலம் கிராம சுகாதாரம் வெகுவாக அபிவிருத்தியடையக்கூடும். ஏனெனில் அப்பாடசாலைகளிற் குழந்தைகள் சுகாதாரத்தைப்பற்றிக்கற்றுக்கொண்டு அதைப்பற்றி அவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வசதியேற்படுகிறது. விசேஷமாகச் சுத்தத் தண்ணீர் சுத்தமான உணவு ஆகியவைகளைப் பற்றி அவர்கள் மற்றவர்களுக்குத் தெரிவிக்கக்கூடும்."

## பொலிஸ் விசாரணைச்சபையின் அறிக்கை

இலங்கையில் உள்ள பொலிஸ்பகுதியிற் பல ஊழல்கள் நிகழ்கின்றனவென்றும், அவற்றை அகற்றிப் பொலிஸ்பகுதியைத் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் செய்த கிளர்ச்சியின் பயனாக, உள்நாட்டு மந்திரசபையினர் ஓர் விசாரணைச்சபையை நியமித்தனர் அல்லவா? இச்சபை ஊர்கடோறும் சென்று ஊரவர்கள் சொல்ல வேண்டிய நியாயங்களைக் கேட்டுவிட்டது. இனித் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும். இந்த அறிக்கை அநேகமாக ஆகஸ்டுமாதம் அல்லது செப்டெம்பர் மாதத்தில் வெளியாகலாம் என்று உள்நாட்டு மந்திரி சென்றவாரம் நிகழ்ந்த அரசாங்கசபைக் கூட்டத்திற் கூறினர்.

## பாராளுமன்றத் தேர்தல் எப்போது நிகழும் என்று தெரியாதாம்

இலங்கைப்பாராளுமன்றத்துக்கான தேர்தல் எப்போது நிகழும் எனத் திட்டமாகத் தம்மால் அறிவிக்கமுடியாது என்று மிஸ்ரர் சேனநாயக்கா சென்றவாரம் நிகழ்ந்த அரசாங்கசபைக் கூட்டத்திற் கூறினர் 1947ம் ஆண்டு மார்ச்மாதத்துடன் இப்போதுள்ள அரசாங்கசபை கலைக்கப்படவேண்டும்.

## 18 மாதக் கடுங்காவல்

யாழ்ப்பாணம் சிவியா தெருவைச் சேர்ந்த கந்தன் நாகேசன் என்பவர், அவ்வூரைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா என்பவரைக் கொலைசெய்ய முயற்சித்தார் என்ற குற்றத்தின்பேரில் யாழ்ப்பாணச் சுப்பிறீம் கோட்டில் 18 மாதக் கடுங்காவற் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

## ஆசிரியர்களின் விஷயம் சிந்திக்கப்படுமாம்

காங்கேசன்துறைப் பிரதிநிதி ஸ்ரீ சு. நடேசன் ஆசிரியர் விஷயமாகக் கொண்டுவந்த தீர்மானம் அரசாங்கசபையிற் சென்றவாரம் நிறைவேற்றப்பட்டது. வரவு செலவுத் திட்டம் இரண்டாம் முறையாக அரசாங்கசபையில் எடுத்தாளப்படும்போது, ஆசிரியர்களுடைய வேதனவிஷயமான மாற்றங்கள் செய்யப்படும் எனச் சபை முதல்வர் மிஸ்ரர் சேனநாயக்கா கூறினர்.

## துணிக்கட்டுப்பாடு இருக்கத்தான் வேண்டுமாம்

உடுகமப்பிரதிநிதியான மிஸ்ரர் சைமன் அபயவிக்கிரம என்பவர் துணிக்கட்டுப்பாட்டு முறையை இலங்கையிலிருந்து நீக்கவேண்டும் எனக் கொண்டுவந்த தீர்மானம் அரசாங்கசபையால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

## லஞ்சம் அகல வழி

### சென்னை அரசாங்கத்தின் முயற்சி

சென்னை அரசாங்கம் தன்கீழ்க்கடமை பார்க்கும் உத்தியோகத்தரிடம் காணப்படும் லஞ்சம் என்னும் கைக்கூலி பெறும் வழக்கத்தைக் கெடுக்க, இப்போது மூனைந்திருக்கிறது. ஒரு உத்தியோகத்தராயுள்ளவர், தமது உழைப்பில் செலவுபோக மிச்சத்தையே சம்பாதிக்கமுடியும். ஆனால் சில உத்தியோகத்தர் அற்ப வேதனம் பெற்றும், அவ்வேதனம் அவர்களுடைய இக்காலச் சீவியத்துக்கே போதாமல் இருப்பச், சம்பாதித்தியம் செய்வது எப்படி? அவர்கள் காணி பூமிகள் வாங்கியும், வங்கியிலும் ஏனைய இடங்களிலும்வட்டிக்குப்பணம் போட்டும்சேமிப்பது எப்படி? இந்தப்பிரச்சினை இப்போதுள்ள நிலைமையில் முக்கியமாகஇருக்கிறது. எனவே ஓர் உத்தியோகத்தர், எதிர்பாராத விதமாகச் சம்பாதித்தியம் வைத்திருப்பதால் அவர் அச்சம்பாதித்தியம் தமக்கு எப்படிக்கிடைத்தது என்பதை அரசாங்கம் திருப்திப்படும்படி விளக்கவேண்டும். அப்படி அவர் விளக்கத் தவறுவாரேயானல், அவர் லஞ்சம் பெற்றபடியால் அல்லது அரசாங்கப் பொருள்களைக் களவாடியதாலேயே செல்வராக முடிந்தது எனக் கருதி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதற்குத் தக்கதாகச் சட்டம் மாற்றியமைக்கப்படும் எனச் சென்னையில் உள்ள காங்கிரஸ் அரசாங்கம் சென்னை கெஸற்பத்திரிகையில் ஓர் அறிவித்தல் கொடுத்துள்ளது.

## சமரஸமாகப் போ

### சமதர்மக்கட்சியின் வேண்டுகோள்

அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபை, இலங்கைவாழ் இந்தியர் நிலைமையை விசாரித்து அறிதற்பொருட்டும், இந்தியர் விஷயமாக இலங்கை அரசினருடன் சமரசப் பேச்சுக்களை நடாத்தும்பொருட்டும் ஓர் உப நிர்வாகசபையை நியமித்திருக்கிறது. இந்தச் சபையின் அங்கத்தவர்களான ஸ்ரீ E. W. அரியநாயகம், ஸ்ரீ G. இராமச்சந்திரன் என்பவர்கள் இப்போது இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். இது ஓர் அரிய சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை, இந்திய அரசாங்கத்துடன் ஓர் சமரசத்துக்கு வரவேண்டும் என்று இலங்கைச் சமதர்மக் கட்சி இலங்கை அரசாங்கத்துக்கு ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

# ஆஷாடபூதிகள்!

## இங்கிலாந்தில் தொழிற்கட்சிப் பரிபாலனம் செல்வது ஒன்று; செய்வது வேறு ஒன்று

### காலி நகரசபையில் தகநாயக்கா பேச்சு!

புதிய அரசியல் திட்டத்தின்படி, பாராளுமன்றத் தேர்தல்களில், அரசியல் விஷயம் காரணமாகச் சிறை சென்றவர்கள் பங்குபற்றக்கூடாது. இது மிகவும் அநியாயம். எனவே, இந்த விதியை அகற்ற வேண்டும் என்ற கிளர்ச்சி இப்போது இலங்கையில் நிகழ்கின்றது. இந்த விதி நீக்கப்படவேண்டும் அல்லது இக்குற்றங்களுக்காகச் சிறை சென்றவர்களுக்குத் தேசாதிபதி மன்னிப்பு அளிக்க வேண்டும். இது இரண்டும் இல்லாத பட்சத்தில், அரசியற் சிறையாளராகவிருந்தவர்கள் பாராளுமன்றத்துக்கு அபேட்சகராக வரமுடியாது.

குறித்த இச்சட்டத்தை மாற்றியமைக்கவேண்டும் என்று சென்ற திங்கட்கிழமை காலி நகரசபையில் ஓர் தீர்மானம் எடுத்தாளப்பட்டு நிறைவேறியது. இத்தீர்மானம் சம்பந்தமாகப் பேசிய மிஸ்ரர் தகநாயக்கா பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த அநியாயமான விதியை இயற்றியதைப் பலமாகக் கண்டித்தார். அவர் கூறியதன் சாரம் வருமாறு:

"இப்போது இங்கிலாந்திலே தொழிற்கட்சி பரிபாலனம் செய்கிறது. பெயரளவில் தொழிற்கட்சி என்றிருந்தாலும், இந்தப் பிரிட்டிஷ் அரசாங்கம் தனக்கு முன்னிருந்த அரசாங்கங்கள், தங்கள் அடிமைநாடுகள் விஷயத்தில் என்னவிதமான கொள்கைகளைக் கைக்கொண்டனவோ, அதே கொள்கையைத்தான் விடாப்பிடியாக இப்போதும் பின்பற்றி வருகிறது. இவர்கள் பொல்லாத உருத்திராட்சப் பூனைகள். ஆஷாடபூதிகள். இவர்கள் பொல்லாத நயவஞ்சகர்."

### வேலியே பயிரை மேய்கிறதா?

யாத்தளையைச் சேர்ந்த அம்பங்கங்கா என்னும் கிராமத்து அதிகாரி 45 புசல் நெல்லுக் கொண்டுபோக உத்தரவுபெற்று 53 புசல் நெல்லைக் களவாகக் கொண்டு சென்றார் என்று சென்றவாரம் மாத்தளை நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டார்.

### சிலாபத்தில் வங்கிக் கிளை

சிலாபத்தில், இலங்கை வங்கியின் கிளை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று ஸ்ரீ J. தியாகராசா, அரசாங்கசபையில் ஓர் தீர்மானம் எடுத்தாளப் போவதாக அறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

### பொலன்னறுவையிற் பேதிநோய்

பொலன்னறுவையில் பேதிநோய் மீண்டும் தலைகாட்டத் தொடங்கி விட்டது இப்போது புதிதாக 3 பேருக்குப் பேதிநோய் கண்டிருப்பதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியய௵
ஆடிமீ கக உ வெள்ளிக்கிழமை.

## உபாத்தியாயர்களின் முறையீடு

### III

இதுகாறும் ஆங்கில உபாத்தியாயர்களின் முறையீட்டையெடுத்துக் காட்டினேம்; இனி தமிழ் சிங்களமென்னும் சுதேச மொழிகளைப் பயிற்றும் உபாத்தியாயர்களுக்கு இந்த வேதன விசாரணைச்சங்கத்தார் விளைத்த அநர்த்தத்தை எடுத்துக் காட்டுவோம்; அந்நாள்தொட்டு இந்நாள்காறும் ஆங்கிலம் பயிற்றும் உபாத்தியாயர்களுக்கு உதவப்பட்ட வேதனத்திற் பாதி விகிதமே சுதேசமொழி பயிற்றும் உபாத்தியாயர்கட்கு உதவப்பட்டதெனலாம்; அப்படி இதுகாறும் உதவி வந்தமையை யிட்டு நாம் குறைகூறக் காரணமில்லையெனலாம்; ஏன்? இவ்வளவு காலமும் ஆங்கில மொழியை அரசமொழியாக மதித்து ஆங்கிலம் பயின்றோர்க்கே உத்தியோகங்களை அளித்து அவரவர் திறமைக்குத்தக வேதனமும் உதவி வந்தமையினுல் ஆங்கிலத்தை எவரும் எத்துணைச் சிரமப்பட்டும் பொருள் செலவிட்டும் படிக்க வேண்டியவர்களாயினர்; இதன் பயனுக, சுதேச மொழி பயின்றோர்க்குப் பெரும்பாலும் உபாத்திமைத் தொழிலன்றி, இல்லையேல் விதானை உடையார் உத்தியோகமன்றி வேறு எவ்வகையான அரச சேவையுங் கிடைத்தல் இலதாயிற்று. மேலும் பிருத்தானிய அதிகாரத்தி லகப்பட்ட இலங்கை மக்களின் தாய்ப் பாஷைகளாக இவ்விரு பாஷைகளும் வழங்கி வருகின்றமையால், இலங்கை மக்கள் எங்ஙனம் பிருத்தானியரின் விசுவாசமான அடிமைகளானரோ, அப்படியே இவ்விலங்கை மக்களின் தாய்மொழிகளான சிங்களமுந் தமிழும் அடிமை மொழிகளாய் வழங்கலாயின; ஆனது பற்றி அடிமை மொழிகளைப் பயிற்றும் ஆசிரியர்கள் இதுகாறும் பாதிவேதனம் பெற்றுவந்தமை நூதனமல்லவெனச் சொல்லினும் பொருந்தும்.

ஆனல் இந்தக்காலத்தில் அரசியல் விஷயங்கள் பெரும் மாறுதலடையலாயின; இந்த இலங்கையாகிய நாட்டின் பரிபாலனப்பொறுப்பு, பெரும்பான்மையும் இலங்கை வாசிகள் கையில் வந்துவிட்டதெனலாம்; அரசியல் விவகாரங்களை இக்காலத்து நிர்வகித்துள்ளவர்களாகிய இலங்கை மந்திரி சபையினரும் ஏனைய அரசாங்கசபை அங்கத்தவர்களும் ஆங்கிலத்தைக் காட்டிலும் சுதேச மொழிகளாகிய தமிழுக்குஞ் சிங்களத்திற்கும் மகத்துவங் கொடுக்க நிச்சயித்து முயன்று வருகிறார்கள்; அரசியல் விவகாரம் முதலாகச் சகல கருமங்களும் இனிமேற் சுதேச மொழிகள் வாயிலாகவே நடைபெறவேண்டுமென்பது இவர்கள் நோக்கம்; இப்படிச் செய்தற்குச் சுதேசமொழிகளை விசேஷமாக அந்த அந்த மொழிகளைத் தாய்ப் பாஷையாகக் கொண்ட மக்களுக்குப் பயிற்றுதற்காகிய ஒழுங்குகளுஞ் செய்யப்படலாயின; ஆங்கிலத்தையும் இனிமேற் சுதேசமொழிகள் வாயிலாகக் கற்கவேண்டுமென்ற கொள்கையும் பிறந்துவிட்டது; ஆதலின் சுதேச மொழிகளை விருத்திபண்ணுதற்குச் சுதேச மொழி யாசிரியர்கள் எவ்வாற்றானும் இன்றியமையாதவர்களாகக் காணப்படுவர்; இங்ஙன மிருக்கும்போது இவர்களுடைய வேதனத்தை ஆங்கில உபாத்தியாயர்களுக்குதவும் வேதன விகிதத்தைக் காட்டிலும் குறைத்து விதிப்பதற்குக் காரணங் காணேமே; அவர்களிலும் பார்க்க இவர்களுக்கு வேதனத்தை உயர்த்திக் கொடுத்தாலும் பிழையாகாதே; சுதேச மொழி உபாத்தியாயர்களும் ஆங்கில உபாத்தியாயர்களும் ஆசிரிய கலாசாலையிற் கல்வி பயிலுதற்காகிய காலம் சிரமம் முதலியன வெல்லாம் ஒத்தனவாகவேயிருக்கின்றன; சுதேச மொழி யாசிரியர் கலாசாலைத் தலைமையாசிரியரும் ஆங்கிலமொழி யாசிரியர் கலாசாலைத் தலைமையாசிரியருங்கல்வியறிவு,தகைமை,வேதனம் முதலியவற்றால் ஒத்தவர்களாகவிருப்ப, ஏனைய ஆங்கில உபாத்தியாயர்கட்குந் தமிழ் உபாத்தியாயர்கட்கும் பேதம் பாராட்ட இவ் விசாரணைச் சங்கத்தார் துணிந்த ஏதுதான் யாதோ?

இனி, பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களாய் வரவிரும்பினுல், அவர்கள் ஆங்கில எஸ். எஸ். ஸீ. பரீட்சையிற் சித்தியடைந்திருத்தல் வேண்டுமெனவும், அப்படிப்பட்ட அவர்களே பயிற்றப்பட்ட ஆங்கில உபாத்திமைப் பரீட்சையின் பிரவேச பரீட்சைக்கு அருகராவரெனவும் வித்தியா பகுதியார் இப்பொழுது விஞ்ஞாபனஞ் செய்துள்ளனர். இதன் நோக்கமென்ன? மேலே சொல்லப்பட்ட உபாத்தியாயர்கள் சிங்களத்திலாக, தமிழிலாக குறித்த பாடங்களை முந்தியே பயின்றவர்கள்தாமே; அப்படியிருப்பப் பின்னர் எதற்காக எவற்றையும் ஆரம்பக் கல்வியிலிருந்து தொடங்க வேண்டுமென வித்தியா பகுதியார் வற்புறுத்தி நிற்கின்றனர்? சிங்கள தமிழ் ஆசிரிய கலாசாலைகளில் இந்த உபாத்தியாயர்கள் முந்திப் பயின்ற பயிற்சி நூநமானதா? இவைகளையெல்லாம் உற்றுராயுமிடத்து, இப்பொழுதுள்ள வேதன விசாரணைச் சங்கத்தார், உபாத்தியாயர் வேதன விஷயமாக ஏதும் விசாரணை செய்து நிர்வகித்தற்குத் தகைமையற்றவர்களென்பதும், சில சந்தர்ப்பத்தில் இச்சங்கத்தார் தாம் செய்யக் கொண்ட நோக்கத்திற்கு நேர்மாறுக [illegible] டனரென்பதும், ஆதலின் ஆசிரியர் வேதன விகிதமாக இவர்கள் செய்த அறிக்கை பூரணமற்றதென்பதும், கல்வி விஷயத்தில் நன்கு ஈடுபட்டு உழைத்து அநுபவம் பெற்ற சில அங்கத்தவர்களைக் கொண்ட விசாரணைச் சபையே உபாத்தியாயர் வேதன விஷயமாக விசாரணைபண்ணி அவர்கள் வேதனத்தைச் சீர்ப்படுத்தி வழங்கச் செய்யத்தக்கதென்பதும் பெறப்படும்.

பயின்றவர் பின்னும் பின்னும்
பயில்வரோ பயனிலாதாய்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—109)

### "நா அசைய நாடசையும்"

அன்றிரவு 8 மணியாதலும் ஒரு மோட்டோர்ரதம் எங்கள் ஐயர்வீட்டு வாசலில் வந்து தங்கியது; தங்குவதற்கிடையில் வரவை எதிர்பார்த்த வண்ணம் அன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்நேரம்வரையில் தலைவாசற்பக்கத்திலிருந்தஐயர் உடனேயெழுந்து இரதத்தண்டை விரைந்து போதலும், அந்த இரதத்திலிருந்து ஒருவர் இறங்கினர்; எங்கள் ஐயர் அவரைக் கண்டமாத்திரத்தே தம் முப்பத்திரண்டு பற்களையுங் காட்டி கையிரண்டையும் விரித்தபடி நீட்டி "வாருங்கள், வாருங்கள்" என்று முகமன் வார்த்தை கூறி, அவரை முந்தி நடக்கவிட்டுத் தாம் தொடர்ந்து சென்று தலைவாசலில் அழைத்துக்கொண்டு வர, அந்தப் பிரபு அங்குள்ள ஒரு நாற்காலியில் இருக்க முயல, எங்கள் ஐயர் அப்படியல்ல இங்கு வாருங்கள் என்று தலைவாசலுக்கடுக்கவுள்ள மண்டபத்திலே ஒரு ஸோபாவின்மீது அமரச்செய்தார்; பிரபுவுடன் வந்த வேலைக்காரன் தலைவாசலில் ஒதுங்கி நின்றான்; சாரதி இரதத்தைத் தலைவாசலுக் கெதிரேயுள்ள முன்றிலிற் கொண்டுவந்து விடுத்துத் தான் அந்த இரதத்திற்றானே இருந்தான்; இவைகளையெல்லாம் நானும் இலட்சுமியும் தலைவாசற்பக்கத்திலுள்ள அறையின் சாளர வழியாக அவதானித்தோம். அவர் யாரென்று நான் இலட்சுமியைக் கேட்க, அவர் இந்தவூர் அதிகாரியென்றும், அதிக செல்வஞ் செல்வாக் குடையவரென்றும் எங்கள் வீட்டு ஐயாவுக்கு வேண்டியவரென்றும்அவர்'நாவசையநாடசையு'மென்றும்ஐயாவுக்கும் அவருக்குமிடையில் நீடித்த நட்புண்டென்றும்; ஆனல்,எங்கள் அம்மாவிற்கு மாத்திரம் அவர் அங்கே வருவது விருப்பமில்லையென்றும் இலட்சுமி எனக்கு இரகசியமாகச் சொன்னள்: அம்மாவிற்கு ஏன் விருப்பமில்லையென்று இலட்சுமியை நான் கேட்க அவர் வகித்திருக்கும் அதிகாரத்திற்கும் வயதிற்குந் தக்க ஒழுக்கம் அவரிடத்திலில்லையென்று அம்மாள் இடையிடையே ஐயாவுக்குச் சொல்வதை நான் கேட்டிருக்கிறேனென்று இலட்சுமி பதில்சொன்னள்; இதற்கிடையில் ஐயர் இலட்சுமியென்று கூப்பிட அவள் அங்கே போனள்; ஊரதிகாரிக்கு ஐயரும் இலட்சுமியுமாக ஆகாரம் வழங்கினர்கள்: அதன்பின்னர் முகவாசத்தோடு வெற்றிலை பாக்கு அவர்க்கு வழங்கப்பட்டன.

### "மனக் காவலுள்ள மகளிருக்கு வருங்குறை யாதுமில்லை"

சற்று நேரஞ்செல்ல, ஆத்தாள் என்னைக் கூப்பிட நான் விரைந்து போனேன் ஆத்தாள் எனக்கு அலங்காரஞ்செய்ய, என் அம்மா அலங்காரஞ் செய்கிறீர்களென்று நானகேட்க, 'மகளே, இங்கே வந்திருப்பவர் இந்தவூர்அதிகாரி' இவர் உங்கள் ஐயருக்கு வேண்டியவராம்' உன்னுடைய சங்கீதத்தைக் கேட்க அதிகாரி ஆசைப்படுகிருராம்; ஆனதால் உன்னை அலங்காரம் பண்ணி ஐயா அதிகாரியிருக்கு மிடத்திற்கு அனுப்பச்சொன்னர்: அதனுற்றான் அலங்காரஞ் செய்கிறேன்; போய்ச் சற்று நேரம் பாடிவிட்டு வாடியம்மா; அதனுல் ஒரு குறையுமில்லை; மனக்காவலுள்ள மகளிருக்கு வருங் குறை யாதுமில்லை; நான் இலட்சுமியையும் உடன் அனுப்புகிறேன்" என்று இதமாகச் சொல்லி அலங்காரஞ் செய்வதை முடித்து இலட்சுமியுடன் ஆத்தாள் என்னை அந்தவூரதிகாரி யிருக்குமிடத்திற்கு அனுப்ப நான் சிந்தனையோடும் இலட்சுமியோடும் அந்த மண்டபத்திற்குப் போனேன்; போகவே கண்ட ஊரதிகாரி "வாரும், வாரும், இப்படி இரும்" என்று தமக்குப் பக்கத்திலேயிருந்த ஒரு "ஸோபா" வில் இருக்கச் சொல்ல, நான் இருத்தலின்றி ஒதுங்கி நிற்க, ஐயர் என்னைப் பார்த்து, "மகளே, சும்மா அப்படியிரு" என்று சொல்ல, நான் நிலத்தில் விரித்துக் கிடந்த ஒரு இரத்தினக் கம்பளத்தில் ஒதுக்கத்துடன் இருக்க, இலட்சுமி என்பிறகே நின்றாள்.

### சந்தன மரத்தைச் சூழநிற்கும் மரம்போல

'வீட்டிற்குரிய ஐயர்என்னைப் பார்த்து, 'மகளே இந்த ஐயா அவர்கள் எங்களுக்கு மிகவும் வேண்டியவர்கள்; இவர்களுடைய கிருபையினுலேதான் நாங்கள் மாத்திரமல்ல, இந்த ஊர் முழுவதும் வாழுகின்றது; இவர்களுக்கு ஒப்பான பிரபு இந்த ஊரில் இல்லையென்று சொல்லலாம்: இவர்கள் கொடைவள்ளல்; எவரும் இவர்களை இவர்கள் வாழும் மாளிகையிற்போய்த் தரிசிப்பதேயொழிய இவர்கள் எவர்வீட்டிற்கும் எழுந்தருளச் சம்மதப்படார்கள்; ஏதோ எங்கள்மேல் அந்நாள் தொட்டு வைத்த பெருங் கருணையினுல் எங்கள் சிறுகுடிலுக்கு இடையிடையே எழுந்தருளி வந்து நாங்கள் செய்யும் அற்ப உபகாரத்தைப் பெரிதாக மதித்து எங்களை வாழவைத்துப் போவார்கள்; சந்தன மரத்தைச் சூழநிற்கும் மரம்போல் இவர்களுடைய பெருமையிற் கீர்த்தியிற் சிறுபாகம் எங்களையுஞ் சேர்கின்றது; இவர்கள் மாளிகையிலே நாள்தோறும் பல சங்கீத வித்துவான்கள் கர்ணாமிர்த சங்கீதத்தைப் பாடியும், பரதநாட்டியம் முதலாம் நாட்டியங்களில் நிபுணைகளாகவுள்ள பெண்கள் நாட்டியஞ்செய்தும், சன்மானங்களை இவர்கள் வரைவின்றி வழங்க, அவர்கள் இருகரங்களாலும் பணிந்து ஏற்றுச் செல்லுவார்கள்; இவரை இந்தவூருக்கு முடிசூடா மன்னரென மதித்துக்கொள் அப்படிப்பட்ட இவர்கள், மகளே, உன்னுடைய சங்கீதத்தை ஒருமுறை கேட்கவேண்டுமென்று விருப்பங்கொண்டு இங்கே வந்துள்ளார்கள்; ஆனதாற் சற்றுப் பாடடியம்மா" என்று பரிந்து கூறி, இலட்சுமியைப்பார்த்து "அந்த மகரயாழை நீ போய் அவதானமாக எடுத்துக்கொண்டுவா" என்று சொல்ல, "ஐயா, நானே போய் எடுத்து வருகிறே"னென்றுசொல்லிக்கொண்டெழுந்து போக, இலட்சுமியும் என்பிறகே வந்தாள்; என்ன இலட்சுமி, இந்த ஊரதிகாரியைப்பற்றி எங்கள் ஐயா அதிகஞ் சொல்லுகிறாரே, உண்மைதானு என்று நான்கேட்க, "இவர் இன்னமும் அதிசமாகச் சொல்லுவாரம்மா; எங்கள் ஐயா சொல்வதிற் சில உண்மையுமுண்டுதான்"

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சீர்திருத்தம்

## 8 வயதின் பின் எழுத்தும் வாசிப்பும்; அதற்குமுன் கிரியாமுறையில் விளக்கம்

### ராஜாஜியின் வேண்டுகோள்

இப்போதுள்ள கல்வி முறையை மாற்றி, இப்போது சிறுபிள்ளைகளாயுள்ளவர்களே நாளை மனிதராய் வருபவர் என்னும் உண்மையை ஆதாரமாகக் கொண்டு, கல்விமுறை அமைக்கப்படவேண்டும் என்று சென்னைப் பிரதம மந்திரியாக இருந்தவரும், காங்கிரஸ் காரியநிருவாகசபையில் அங்கத்தவருமாயிருப்பவருமான ஸ்ரீ ஜ. ந். ச இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சென்றவாரம் சென்னையில் நிகழ்ந்த ஓர் ஆசிரியர் கூட்டத்திற் கூறினர். கல்வி முறையைத் திருத்தும் விஷயமாக அவர் கூறியதன் சாரம் வருமாறு:

"எங்கள் சொந்த மக்களால் நடத்தப்படும் அரசியல் ஸ்தாபிதமானல் கல்வி விஷயமாக இரண்டு கருமங்கள் நடக்கவேண்டும். முதலாவதாக தாய்ப்பாஷைமூலம் கல்விகற்பித்தல். இது மிகவும் பிரதானமான விஷயமாகும். ஆனல், தகுந்த பாடப்புத்தகங்கள் தாய்ப்பாஷையில் இல்லாமை பற்றி இந்த முறையைப் பின்பற்றும் விஷயம் கொஞ்சக் காலத்துக்குத் தவணையிடப்படலாம் ஆனல் ஆசிரியராகவுள்ளவர்—அதாவது இப்போது அந்நிய பாஷையாகிய ஆங்கிலம்மூலமாகக் கல்வி கற்பித்து வருகின்ற ஆசிரியர்கள்—இப்படியான மாற்றத்தைக்கண்டு அஞ்சக்கூடாது. அவர்கள் இத்தகைய மாற்றத்தை வரவேற்று அதற்குத் தங்களை ஆயத்தப் படுத்திக்கொள்ளவேண்டும்.

"இரண்டாவதுவிஷயம் என்னவெனில் 8வயதுக்குமுன்னர் பிள்ளைகளுக்குக் கிரியைமுறையிற் படிப்பிக்கும் விஷயமேயாகும். இப்போது சிறு பிள்ளைகளுக்கு எழுத்து வாசிப்பு என்பன மிகச் சிறுவயதில் இருந்தே சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. 8 வயது வரும்வரைக்கும் எழுத்து, வாசிப்பு என்பன தேவையில்லை என்றே நினைக்கிறேன். எழுத்து, வாசிப்பு இல்லாமலேயே சிறுபிள்ளைகளுக்கு ஆரம்ப விஞ்ஞானசாஸ்திரம்—அவர்களின் 8 வயதுக்கு முன்னரேயே படிப்பித்துவிடவேண்டும். முற்காலத்தில் எங்கள் நாட்டில் வாழ்ந்த சிற்ப சாஸ்திரிகள் எழுத்து வாசிப்பு இல்லாமல், உலகத்திலேயே அற்புதமாக விளங்கும் எங்கள் ஆலயங்களைக் கட்டிமுடிக்கவில்லையா? 8 வயது நிரம்புமுன், பிள்ளைகளுக்கு எவ்வளவோ விஷயங்களை எழுத்தும் வாசிப்பும் இல்லாமலேயே சொல்லிக் கொடுக்கமுடியும். இப்படிச் சொல்லிக்கொடுத்தால் 8 வயதின்பின்னர் எழுதல், வாசித்தல் என்பன அப்பிள்ளைகளுக்கு மிக இலகுவாகவரும்.

"இப்போதுள்ள பள்ளிக்கூடங்கள் சிறுபிள்ளைகளுக்கு ஓர் சிறைச்சாலை போன்று இருக்கின்றன. எழுதல் வாசித்தல் என்பன தமக்கு ஆசிரியர் தரும் தண்டனைகள் என்று பிள்ளைகள் நினைக்கவேண்டி யேற்படுகிறது. என்னுடைய ஆலோசனைப்படி செய்தால் பிள்ளைகள் படிப்பை ஓர் தண்டனை என்று நினைக்கமாட்டார்கள்."

---

### இனி சினிமாவில் நடிக்கமாட்டாராம்

சேவாசதனம், சகுந்தலை, சாவித்திரி, பக்த மீரா முதலாம் படங்களில் நடித்துப் பெரும் புகழீட்டிய கோகிலகான ஸ்ரீமதி எம் எஸ். சுப்புலக்ஷ்மி இனி சினிமாவில் நடிப்பதில்லையென முடிவு செய்துவிட்டார் என ஓர் செய்தி கூறுகிறது இப்பெண்மணி இனிப் பொதுக் கைங்கரியங்களுக்குத் தம் சங்கீதக் கச்சேரிகள்மூலம் உதவி செய்யத் தீர்மானித்திருக்கிறாராம்.

# பயங்கர இயக்கம்

### பலஸ்தீனத்தில் பிரிட்டிஷார் கொலை

பலஸ்தீனத்தில் யூதரின் பயங்கர இயக்கம் உச்சநிலையை அடைந்துவிட்டது. சென்ற திங்கட்கிழமை ஜெருசலேம் நகரில், பிரிட்டிஷ் படைகள் தங்கியிருந்த ஸ்தாபனத்தின்மீது யூதப் பயங்கர இயக்கத்தினர் குண்டெறிந்ததால், பலர் மாண்டனர்: நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர் மரணமடைந்தவர்களில் பல பிரிட்டிஷ் அதிகாரிகளும் சேர்ந்தவராவர்.

இது இவ்வாறாக இருக்க, யூதர் தலைவராகிய டக்ரர் வைஸ்மன் என்பவர் இப்போது லண்டனில் பிரிட்டிஷ் பிரதமமந்திரியுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றார். ஆங்கில-அமெரிக்க அறிக்கைப்படி 1 லட்சம் யூதரைப் பலஸ்தீனத்துக்கு அநுமதிப்பது விஷயமாகவே இப்போது சம்பாஷணைகள் நடப்பதாகத் தெரிகிறது.

இனியும் யூதரைப் பலஸ்தீனத்திற்குள் விடவொண்ணாது என்று அராபியர் விடாப்பிடியாக நிற்கின்றனர். அராபியரின் ஏகோபித்த அபிப்பிராயத்துக்கு மாருக, யூதரை வரவிட்டால் உலகில் உள்ள முழு இஸ்லாமியரும் இங்கிலாந்தை எதிர்ப்பர் என்று அராபியர் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

# இந்தியத் தூதர்

### செனநாயக்காவையும் கண்டனர்

இந்தியக் காங்கிரஸ் மகாசபையினல் நியமிக்கப்பட்ட விசாரணைச் சபையின் அங்கத்தவர்களில் இருவரான ஸ்ரீ E. W. அரியநாயகமும், ஸ்ரீ G. இராமச்சந்திரனும் சென்ற ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வந்து இலங்கைவாழ் இந்தியர் நிலைமைபற்றிய தமது விசாரணையை ஆரம்பித்தனர். அவர்கள் அரசாங்கசபை முதல்வராகிய மிஸ்ரர் செனநாயக்காவையும் மூன்றுமுறை சந்தித்துப் பேசினர் என்று தெரிகிறது.

ஸ்ரீ அரியநாயகமும் இராமச்சந்திரனும் இலங்கையில் உள்ள பல தோட்டப்பகுதிகளுக்குஞ்சென்று அங்கு இந்திய மக்களின் நிலைமையை அவதானித்தனர் இந்தியராயுள்ளார் ஒற்றுமையுடனும், கட்டுப்பாட்டுடனும் வாழவேண்டும்; இலங்கை மக்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று அவர்கள் இந்திய மக்களுக்குப் புத்திகூறினர். வேற்றுநாடுகளில் வசியும் தனது மக்கள் விஷயத்தில் இந்தியா மிகுந்த கவலை செலுத்தி வருகிறது: அவர்களுக்கு அந்நாடுகளில் தீங்கு இழைக்கப்படுவதை இந்தியா ஓர்போதும் சகிக்கமாட்டாது என்றும் அவர்கள் கூறினர்.

இவர்கள் இருவரும் விசாரணையை முடித்துக்கொண்டு இந்தியாவுக்குப் போய், விசாரணைச்சபையின் மற்றும் இரு அங்கத்தவர்களான ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியாருக்கும் பண்டிதர் நேருவுக்கும் தமது அறிக்கையைச் சமர்ப்பிப்பர்; அதன்பின்னரே பண்டிதர் நேருவும், ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியாரும் இலங்கைக்கு வருவர் என நம்பப்படுகிறது. அநேகமாக அவர்களின் விஜயம் வருகிற ஆகஸ்டு மாதத்தில் நிகழலாம்.

# சித்துப் பிரபஞ்சம்

சே. வெ. ஜம்புலிங்கப்பிள்ளை

காணப்படுவதாகிய இவ்வுலகம் மூர்த்தங்களும் சடப்பொருள்களுமாகிய பூத பௌதிகங்களின் காரியமேயாய் அனைத்தும் சடமாத்திரையேயாம் என்று வாதிப்பர் நாஸ்திகர். அவர்கள் இவ்வுலக நிகழ்ச்சிகளைச் சிறிது நுண்ணதாக ஆராயப்புகின் அவற்றின் கண்ணே மூர்த்த சத்தின் வேறாகிய அமூர்த்த சித்தினியல்பும் காண்பர். அதாவது சடப்பிரபஞ்சமன்றிச் சித்துப் பிரபஞ்சமும் அகண்டாகாரமாய் உண்டென்பது நன்கு புலப்படும். இச் சித்துப் பிரபஞ்ச இயல்பை எடுத்துச் சீர்தூக்கிப் பார்க்கும்போது அது கடவுளுண்மைக்குப் பெரிதும் சாதகமாய், இந்தச் சித்துகளைப்போலவே சடப்பிரபஞ்சத்தின் வேறாகியதோர் மகாசித்துப் பொருள் உண்டென்றும், இந்தப் பொருள்காரணமாகவே சித்தும் அசித்துமாகிய இருகூற்றுப் பிரபஞ்சமும் இயங்குதல்பெறும் என்றும் பிரபஞ்சத்தே காணப்படும் சித்து முயற்சிகளுட் பல ...ம் மக சித்துப் பொருளின் திருவருட் பிரகாசமே யென்றும் தெளிவுறப் புலப்படும். யாங்ஙன மென்பதைச் சில திருஷ்டாந்தங்கள் வாயிலாகக் காட்டுவாம்:—

சீவராசிகளிடத்தே சடபாகத்தின் வேறாகியதோர் சித்துப்பாகம் இருப்பதனலன்றோ அவை அறிவு சேட்டித்தலும் சேட்டித்தவழிச் சுயேச்சையாகத் தொழில்செய்தலும் இயலுவனவாயின. இந்த அறிவு தொழில்களுக்கு எமது உடம்பைக் காரணமெனக் கொள்ளுதல் கூடாது. ஆனல் இவ்வறிவு தொழில்களுக்குக் காரணமாகியதோர் உயிர் உண்டெனக்கொள்ளுதலே அதன் மறுதலையினும் யுத்திக்கியைந்ததாதலின், இவ்வுயிர்களைப்போலச் சிற்சொரூபியாயுள்ள ஓர் இறைவனுமுளன் எனக் கொள்ளுதலே எமது யுத்திக்குப் பெரிதும் இயைபுடைத்தாம். எமது உடம்பை இயக்குதற்கு ஓர் உயிர் வேண்டப்படும். பிரபஞ்சத்தை இயக்குதற்குச் சித்துப் பொருள் வேண்டியதில்லையோ? எமது உடம்பின் கண்ணே அவ்வுடம்பின் வேறாகியதோர் சித்துப் பொருள் இருத்தல் சாலும். பிரபஞ்சத்தின் கண்ணே அதற்கு வேறாகியதோர் மகாசித்தமைந்து விளங்குதல் முடியாததோ? ஆகவே பிரபஞ்ச சேட்டைக்குக்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# நூதனமான பரீட்சை

## மொழிபெயர்ப்பால் நேர்ந்துள்ள அநர்த்தம்

### பல விடைகள் தரக்கூடிய கேள்விகள்

### பரீட்சார்த்திகளைத் திகைக்கவைக்கும் நோக்கமா?

(ஓர் பரீட்சார்த்தி எழுதுவது)

சென்ற சனிப்பரீட்சை [20-7-46ல் நடந்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்குப் பரீட்சார்த்திகளையும்தகுதி பார்க்கப்படும் ஆசிரியர்களையும் தெரிதற்காய பரீட்சை(தமிழ்)]த் தினத்தன்று எமக்கு வந்த தமிழ்க் கணித பாட வினுப்பத்திரமும் ஆங்கிலகணித வினுப்பத்திரமும் ஒரே கணக்குகளையே கொண்டுள்ளன. எனினும் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த காரணத்தாலோ, அல்லது வேறெக் காரணங்களாலோ தமிழிற் பரீட்சையெடுத்த எமக்கு (இத் தமிழ் மொழிபெயர்ப்புக்) இக்கணக்குகள் பாஷைக் கஷ்டம் நிரம்பியனவாகக் காணப்பட்டன. கணக்குகள் சாதாரணமாகச் செய்யும்தரத்தன. ஆனல் அவை தமிழில் பல கருத்துக்களைத் தந்து பல மாதிரிச் செய்யக்கூடியனவாகவும், பலவிடைகள் வித்தியாசமாக வரக்கூடியனவாகவுமிருந்தன. கணக்குப் பாடத்தில் மாணவன் கணக்குத் திறமையையா, அன்றேல் பாஷைத் திறமையையா பார்ப்பது? ஒரே கணக்கு இரண்டு மூன்று முறையாகச் செய்யத்தக்கதாகக் காணப்பட்டது அதனல் வரும் விடைகளுமோ மிக வித்தியாசமானவை. இதற்குச் சோதிடம் தான் பார்க்கவேண்டுமா? அல்லது குருட்டடியாக ஒரு முறையைப் பின்பற்றிச் செய்துவிடுவதா?

இவை மட்டுமா? இன்னும் மற்றக் கணிதங்களெல்லாம் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒரே மாதிரியானவை; ஒரே இலக்கங்கள் கொண்டவை. அப்படியிருக்கவும் தமிழ்க் கணித வினுப்பத்திரத்திலுள்ள சிலகணக்குகளின் இலக்கத் தொகைகள் பேதப்பட்டுக் காணப்படுகின்றன. இவ்வித்தியாச மேற்படுவானேன்? (ஒரேமாதிரியானவற்றுள்) இப்பிழையும், இதனல் நாம் விடும் பிழையும யாரைச் சார்ந்தது? ஆங்கிலத்திலுள்ள இலக்கங்களைக்கொண்டு அக் கணக்குகளை வெகு இலகுவாகச் செய்யக்கூடியதாக இருக்கிறது. அங்ஙனமிருக்கத் தமிழ் மாணவர்களாகிய நாங்களா இக் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டும்?

சில தமிழ் பதங்களுக்குப் பக்கலில் ஆங்கிலப் பதம் போட்டிருப்பின் எவ்வளவு நலமாகும்? ஆங்கிலம் சிறிதும் வாசிக்கத் தெரியாத காலங்களில் கூடும் தமிழ்ப் பதங்களுக்குப் பக்கலில் ஆங்கிலப் பதம் எழுதி வந்தார்கள் இப்போதும் மற்றும் வினுப் பத்திரங்களில் எழுதிவருகிறார்கள். ஆனல் இத்தமிழ்க்கணித வினுப்பத்திரத்தில் அவை காணப்படவேயில்லை ஏன்? தமிழ்த் தாரகாப் பத்திரங்களையெல்லாம் எறிந்துவிட்டு ஓடியோடி ஆங்கிலம்கற்ற எம்போன்றவர்களுக்கு ஓர் ஏமாற்றாக முடியவேண்டுமென்றதற்காகவா?

பொதுஅறிவு, பாஷை வினுப்பத்திரங்கள் போற்றத் தகுந்தன. தெளிவான வசனநடை பொருந்தியன. ஆனல் கணிதப் பத்திரம் ஆங்கிலச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களைக் கொண்டிருக்கலாம்? ஆனல் கணிதத்தையாவது கணிதத்தில் (ஆங்கில)கொண்டுள்ள விடயங்களையாவது விளக்குவனவாகவில்லை.

ஒன்பது கணக்குகளுக்குப் பதில் அவற்றுள் பதினைந்துக்கு மேற்பட்ட கணக்குகளும் வித்தியாசம் வித்தியாசமான விடைகளும் கொண்டிருக்க அமைத்தது இத் தமிழ்மொழிபெயர்ப்பாளர் திறமைதான்! இக் கணக்குகளைத் தமிழில் நல்லவசன நடையில் ஒரேமுறையைக் கொண்டதாக, அல்லது, எந்த முறைப்படி செய்யினும் ஒரே விடை வரத்தக்கதாக இக்கணக்குகள் அமைக்கப்பட்டிருக்கலாகாதா? இவைகளையெல்லாம் கல்வி அதிகாரிகளும் விடை பார்ப்பவர்களும் அவதானித்துப் புள்ளிகள் வழங்குவார்கள் என நான் எண்ணுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமகளிர் கல்லூரியில் திருப்பள்ளி எழுச்சி

'கானப் ட்ரியை''

கோயில்களில் தெய்வங்கட்குத் திருவிழாச் செய்து இஷ்ட தெய்வங்களைப் பூசித்து மக்கள் மகிழுகின்றனர். கலைக்கோயில்களாக இருக்க வேண்டுமென நாம் விரும்பும் கலாசாலைகளும் "காணிவல்'' என்னும் விழாக்களை நடாத்தி மக்கள் மனதை மகிழ்விக்கின்றன. அதில் இந்துமகளிர் கல்லூரியார் ஸ்வர்க்கலோகத்தில் இருக்கும் லக்ஷுமி, சரஸ்வதி, பராசக்தி என்போரையெல்லாம்கூட என்னவோ செய்து "வாலாயம்''பண்ணித் தங்கள் கல்லூரியிலேயே நிரந்தரம் வசிக்குமாறு செய்துவிட்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் இந்து மகளிர் கல்லூரியும் சமீபத்தில் 'கார்னிவல்' (Carnival) நடத்தினர்களல்லவா! சென்ற 8-7-46 திங்கட்கிழமை பிற்பகல் 8 மணி தொடக்கம் கல்லூரி நடனகலா மண்டபத்தில் இந்துமகளிர் கலாசாலையார் "திருப்பள்ளி எழுச்சி'' எனும் நிகழ்ச்சியைக் காட்டுவதாக இருந்தது. திருவாசகத்தில் எம்பெருமானை எழுந்தருளச்செய்யும் திருப்பள்ளி எழுச்சியாய் இருக்குமோ அல்லது பாரதமாதா பள்ளியெழுச்சியோ எனக் கருதினேன் நான். ஆனால் என் நினைப்பிற்கு மாருக,

"மந்திர வேதங்கள் கீதங்கள்
கோயில் மணிகள் கிணீரென,
சுந்தர மாதர் குரலும்,
விரலும் சுதியுடன் சேர்க்கிட,
தந்திமித் தோமென மத்தளம்
யாழைத் தழுவி முழக்கிட,
சுந்தம் பொழிந்து தவழ்ந்து வர''

இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி காட்சியளிக்கும் கந்தர்வலோகமாகக் காட்சியளித்தது. மனவுறுதி, பொறுமை, விரதம், கற்பு, வீரம் முதலிய நற்குணங்களுக்கு எடுத்துக்காட்டாக சகுந்தலை, கண்ணகி, சாவித்திரி, சீதை, கஸ்தூரிபாய், கமலா நேரு என்போரின் லட்சியங்கள் விளக்கப்பட்டன. தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்குச் செல்லுமாறு பிரம்ம தேவனல் கட்டளையிடப்பட்ட ஆறு தேவமகளிரும் பெண்களுக்குரிய சகல லட்சணங்களுடன் பூவுலகத்தில்வாழ்ந்து பெண்ணுலகை மேலோங்கச் செய்யுமாறு ஞானசக்தி வரமளிக்கிருள். சக்தியருளினல் இம்மகளிர் பூலோகத்தில் வாழ்ந்த சகுந்தலை, கண்ணகி, சாவித்திரி, சீதை கஸ்தூரிபாய் என்போரின் உந்நத வாழ்க்கையினை மனக்கண்ணும் கண்டு களிப்புறுகின்றனர். பூவுலகில் தாமும் வாழ இச்சையுறுகின்றனர். இவர்கள் பூவுலகு செல்லும் செய்தியை அறிந்த அருந்ததி, கார்க்கி, மைத்திரேயி, திரௌபதி என்போர் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்படி தம் மகிமைகளைக் கூறுகின்றனர். ஆசீர்வதிக்கின்றனர். தேவமகளிர் ஆடல் பாடல்களால் கிரியாசத்தியின் கிருபையை வேண்டுகின்றனர். 'சுடர்களைப்போல் உலகில் பிரகாசிக்கின்றனர்'' எனச் சக்தி வரமளிக்கிருள்; மகளிர் மட்டிலா மகிழ்ச்சியடைந்து ஆடுகின்றனர். இதுதான் வரலாறு எவ்வளவோ பெரிய விஷயம். இதைப் பொருத்தி மற்றவர்கள் வாழ்க்கையுடன் சம்பந்தப்படுத்தி, நாடக ரூபமாக்கி நடிப்பதென்பது எளிதான காரியமன்று. ஒவ்வோர் பாத்திரமும், தத்தம் பகுதியை இடன்றளவு சிறப்பமையச் செய்தனர். சில பல குறைகளும் இருக்கத்தான் செய்தன. மேடை போதியதாயில்லை பல்வேறு சுதிகளிலும் பாடியதால் பக்கவாத்தியகாரர் அநுசரணையாக வாசிக்க முடியாமல் இடர்ப்பட்டனர். எலவே ஒழுங்கான முறையில் ஒத்திக்கை நடாத்தியிருக்கவேண்டும். ஒவ்வோர் கட்ட (Scene) முடிவிலும் 'இனி ஏதும் நிகழ இருக்கிறதா இல்லையா' என்று அறியமுடியாமல் "கப் சிப்'' என்றிருந்தது. நடனங்களைப்பற்றி அபாரமாகக் கூறுவதற்கில்லை; ஆனலும் "பராசக்தியின் ஜனனி'' க்கு அபிநயம் பிடித்ததைப் பாராட்டத்தான் வேண்டும். மற்றும்படி மேடை அலங்காரம், உடை அலங்காரம் நடிப்பு என்பன நன்ருகவே அமைந்திருந்தன. கலாசாலைத் தலைவியரும் ஆசிரியரும் ஒத்துழைத்து இவ்வளவு குறைந்த காலத்திற்குள் சிறந்த காரியங்களைச் செய்து வளர்த்த கலாசாலைகளுக்கு தாங்கள் சளைக்கவில்லை என்பதைக் காட்டிவிட்டனர். யாழ்ப்பாண நகரில் இந்துப் பெண்களுக்கிருந்த குறையை இக்கலாசாலை நிறைவாக்கப்போவது பெரிதும் மகிழ்ச்சிக்குரியதே. இக்கல்லூரி மேன்மேலும்வளர்ச்சி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் திரு. K. கனகரத்தினம அவர்கள்

சென்ற (14-7-46) ஞாயிற்றுக்கிழமையன்று அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள இலங்கை மாணவர்களால் இலங்கை அரசாங்கத்தில் "ஓடிற்றர் ஜெனரலாக''க் கடமை பார்த்துவந்த திரு K. கனகரத்தினமவர்களுக்கு ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. பண்டித வித்துவான் திரு க. கி. நடராஜனவர்கள் தலைமை வகித்தார்கள். தேநீர் விருந்தின்பின் திரு. க. கி நடராஜனவர்கள், திரு. கனகரத்தினமவர்களை வரவேற்றுப் பேசுங்கால், அவர்களது திறமையையுங் குணசீலங்களையும், பரோபகார சிந்தையையும், பிறவற்றையும் எடுத்துக் காட்டினர். அதன்பின், திரு. கனகரத்தினமவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர் அதுகாலை, இலங்கை மாணவர்கள் தேசீய உணர்ச்சியை வளர்க்கவேண்டுமென்றும், ஒன்றுபட்ட இலங்கையை ஆக்குதற்கு அவர்கள் முயலவேண்டுமென்றும் வற்புறுத்தினர். பல்கலைக்கழகத்திற் கற்குங் காலத்தில் மாணவர்கள் எந்தப்பகுதியிற் கற்றபோதிலும் எல்லாப் பகுதிக்கும் இன்றியமையாத அடிப்படையாக உள்ள தேசீயக் கலைஞானத்தையும் அவர்கள் பிரதானமாக விருத்தி செய்துகொள்ளவேண்டுமென்றும் ஆலோசனை கூறினர். அன்றியும், இலங்கை—இந்தியத் தொடர்பை நல்ல வழியிற் பேணிக்கொள்ளவேண்டுமென்றும் கூறினர். கற்று முடிந்தபின், இலங்கையின் புதிய முன்னேற்றத்துக்கு உதவிபுரியக் கூடியதாகவும் உழைப்பதற்கு மாணவர்கள் தயாராகவேண்டுமென்றும் சொன்னர்.

ஈற்றில், தலைவர் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவெய்தியது

## தேகவியோகம்

குழந்தை காமாட்சி

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்து ஆசிரியர் பிரமஸ்ரீ C. P. சுந்தரசர்மா அவர்களின் செல்வக் குழந்தை காமாட்சி சென்ற 19-7-46 வெள்ளிக்கிழமை மாலை அகால மரணமடைந்தது. இக்குழந்தையைப் பிரிந்து துக்புறும் பெற்றோர் முதலியோருடன் எமது அநுதாபம் உரியதாகுக.

தானவரவு

ஷை குழந்தையின் ஈமக் கிரியையின் போது, தாயாரால் சைவபரிபாலனசபைக்கென வரித்தனுப்பிய ரூபா 5 பெற்ரும்.

மானேஜர்.

# துணிகள் வேண்டுமா?

## அப்படியானல் இந்தியர்குறையைப் போக்கு இந்திய அரசாங்கம் அப்டடிக் கூறுமா?

### ஜவுளித் தட்டுப்பாட்டின் பயன்

"இலங்கைக்குத் துணிகள் அனுப்பும் விஷயத்தில் இந்தியா தாராள மனப்பான்மையுடன் நடக்கவேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்கள்; உண்மைதான். அப்படியானல் உவ்விடத்திற் குடியேறியுள்ள இந்தியமக்களை இலங்கையும் தாராள மனப்பான்மையுடன் நடத்தவேண்டும் என்று இந்தியா கேட்டால் அது பிழையாகுமா?''

இவ்வாரம், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஓர் பிரபல இந்திய ஜவுளி வியாபாரி, கொழும்பு ரைம்ஸ் பத்திரிகை நிருபர் கண்டபோது மேலே காட்டியவாறு கூறினர். இன்னும் அவர் கூறியதாவது:

"இந்தியா இப்போது உணவு விஷயத்தில் மிகவும் கஷ்டப்படுகிறது. எனவே, தனக்கு உணவுப் பொருள்கள் அனுப்பும் தேசங்களுக்கே தனது மிதமிஞ்சிய துணிகளை யனுப்ப இந்தியா ஆலோசித்து வருகிறது. ஆனல் இலங்கையை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இலங்கை விஷயத்தில் இந்திய அரசாங்கம் தாராள மனப்பான்மையுடன் நடக்கும் என எதிர்பார்க்கலாகும். ஆனல் இலங்கையில் இந்தியரின் பிரச்சினை ஒன்று குறுக்காக நிற்கிறது எனவே, ''இந்தியமக்களின் குறைகளை அகற்றுதவரை, உங்களுக்குத் துணிகள் அனுப்பமாட்டோம என்று இந்திய அரசாங்கம் கூறுமானல் அதனைப்பற்றி நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை.''

## நேருவைச் சந்தித்தார்

இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாகவுள்ள ஸ்ரீ ஜாத் எம் எஸ். ஆனே சென்ற திங்கட்கிழமை காங்கிரஸ் தலைவராகிய பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களைச் சந்தித்து, இலங்கை வாழ் இந்தியர் நிலைமை பற்றிப் பேசினர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

## பிரிட்டிஷ் பாராளுமன்றத்தவர் மரணம்

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சுயேச்சைத் தொழிற்கட்சி அங்கத்தவராகவிருந்து இந்திய சுதந்திரத்துக்காக அரும்பாடுபட்ட மிஸ்ரர் ஜேம்ஸ் மாக்ஸ்ரன் என்பவர் தமது 61-ம் வயதில், சென்ற செவ்வாய்க்கிழமை மரணமெய்தினர்.

## உருளைக்கிழங்குகள் வருகின்றன

ஆகஸ்டு மாதத்துடன் பெருந்தொகையான உருளைக்கிழங்குகள் ஆஸ்திரேலியா முதலாம் நாடுகளிலிருந்து இலங்கைக்குக் கிடைக்குமென உணவுக்கட்டுப்பாட்டதிகாரி கூறுகிருராம் அடுத்தவாரம் 6 லட்சம் அப்பிள் பழங்களும் ஆஸ்திரேலியாவிலிருந்து கிடைக்குமாம்.


# ★ கர்ணமிர்த சங்கீதக் கச்சேரி ★

1946-ம் ஆண்டு ஜூலை 31உ புதன்கிழமை இரவு 7 மணி தொடக்கமாக

யாழ்ப்பாணம்

இந்துக்கல்லூரி மண்டபத்தில்

மதுர கீதவாணி

**N. C. வஸந்தகோகிலம்**

அவர்களின் ஒப்புயர்வற்ற சங்கிதக் கச்சேரி

பிரவேசச் சீட்டு விபரம்: ரூபா 25. 15. 10. 5

கீழ்க்கண்ட இடங்களில் பிரவேசச் சீட்டுகளை முன்னதாகவே பெற்றுக்கொள்ளலாம்

1. யாழ்ப்பாணம், அப்போதிக்கரீஸ், பெரியதெரு, யாழ்ப்பாணம்
2. ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலை, காங்கேசன் துறைரோட் யாழ்ப்பாணம்
3. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
4. யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி



(Mis 125 19—30)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### அரசியல் நிர்மாணசபை

அரசியல் நிர்மாணசபைக்குப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யும்வேலை இவ்வாரத்துடன் முடிவடைந்துவிட்டது. இச்சபைக்குத் தங்கள் பிரதிநிதிகளை அனுப்புவதில்லை என்று சீக்கியர் முடிவுசெய்திருக்கின்றனர், ஆனல் பாராளுமன்றத்தில், பெதிக் லோறன்ஸ் பிரபு சீக்கிய மக்களுக்கு விடுத்த வேண்டுகோளின் பயனக, அவர்கள் தங்கள் தீர்மானத்தைப் புனராலோசனை செய்து தங்கள் பிரதிநிதிகளை அரசியல் நிர்ணயச் சபைக்கு அனுப்பலாம் என்று இப்போது செய்திகள் கூறுகின்றன.

●

### பிரான்சிய போத்துக்கீய நாடுகள்

இந்தியாவில் ஒருசில இடங்கள் இன்னும் பிரான்சுக்கும், போத்துக்கீசருக்கும் இருக்கின்றன. புது அரசியல் நிறுவப்படுங்கால், இந்த இடங்களும் சுதந்திரம் பெறுமா என்ற ஓர் பிரச்னை இப்போ எழுந்திருககிறது. பிரான்சியர் தம் வசமுள்ள காரைக்கால், புதுச்சேரி என்பவற்றிலிருந்து நீங்கத் தயாராயிருப்பதாகச் சொல்லுகின்றனர். ஆனல் போத்துக்கீசர் அப்படிச் செய்யும் இஷ்டமுடையவர்களாகக் காணப்படவில்லை. இப்போதும் கோவை என்னும் இடத்தில் அவர்கள் சுதந்திரக் கிளர்ச்சியை ஒழிப்பதற்கு அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றனர். இந்த அடக்குமுறைகளைக் கண்டித்துப் பண்டிதர் ஜவஹர்லால்நேரு ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறர்.

●

### இனித் தடையில்லை

பண்டிதர் நேரு முந்திக் காஷமீரம் சென்றபோது, அவர்மீது தடையுத்தரவு விதிக்கப்பட்டிருந்தது. பின்னர் காஷ்மீரப் பிரதம மந்திரி, டெல்கிக்குவந்து இந்தியக் காங்கிரஸ் தலைவர்களுடன் இவ்விஷயமாகச் சம்பாஷித்துவிட்டுத் திரும்பினர். இதன் பயனக பண்டிதர் ஜவஹர்லால்நேரு, காஷ்மீரப் பிரசைகள் மகாநாட்டின்தலைவராகிய ஷெயிக் அப்துல்லாமீதுள்ள வழக்குச் சம்பந்தமாகக் காஷ்மீரத்துக்கு இனிப் போகும்போது அவர்க்குத் தடை விதிக்கப்படமாட்டாது என்று ஓர் செய்தி கூறுகிறது

●

### முஸ்லீம் லீகிற்குப் படுதோல்வி

பாஞ்சாலத்தில், தனது ஆட்சியை நிறுவமுடியாமற் போனதையிட்டு முஸ்லிம் லீக் ஆத்திரமடைந்து இருக்கிறது. முஸ்லிம் லீக்கிற்கு மாறுசவுள்ள காங்கிரஸ் யூனியனிஸ்ற், தேசீய முஸ்லீம்கள், சீக்கியர் என்னும் கட்சிகள் ஒன்ருகச் சேர்ந்து அமைத்துள்ள மந்திரசபையே இப்போது பாஞ்சாலத்தில் ஆட்சி செலுத்துகிறது. சென்றவாரம் முஸ்லிம் லீக்கினர் மந்திரசபையைக் கவிழ்ப்பதை நோக்கமாகக் கொண்டு ஓர் தீர்மானத்தை எடுத்தாண்டனர். ஆனல் அத்தீர்மானம் படுதோல்வியடைந்தது. அதன் பயனக, இப்போதுள்ள மந்திரசபை கூடிய ஸ்திரமுள்ளதாக வந்துவிட்டது

●

### சிந்துவில் அநீதி!

சிந்து மாகாணத்தில் முஸ்லிம் லீக்கினரிலும் பார்க்க, மிஸ்ரர் சையத் என்பவரின் கூட்டுக் கட்சி அதிக வலிமை பெற்றிருந்தபோதிலும், அம் மாகாணத்துத் தேசாதிபதி சேர் பிரான்சிஸ் மட்டி, முஸ்லிம் லீக்கினரைக்கொண்டு மந்திரசபை அமைப்பித்துவிட்டார் இம் மந்திரசபைமீது நம்பிக்கையில்லை என்று தாம் ஓர் தீர்மானத்தை எடுத்தாளப் போவதாக மிஸ்ரர் சையத் தேசாதிபதிக்கு அறிவித்தல் கொடுத்துச் சட்டசபையைக் கூட்டும்படி கேட்டிருந்தார். அப்படித் தீர்மானம் விவாதிக்கப்பட்டால், மந்திரசபை அழிந்துவிடும் என்ற பயத்தினல், தேசாதிபதி சட்டசபையைக் கூட்ட மறுக்கிருர், இந்தச் சட்ட விரோதமான விஷயம் இந்தியா மந்திரிக்கும், இராஜப் பிரதிநிதிக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## உயிர்க் கொலை

உயிர்களைக் கொன்று அவற்றின் மாமிசத்தை உண்ணுதல மகா பாவமாகும். எம்முடைய தேகத்தில் ஓர் அற்ப ரணம் கண்டால், நாம் எவ்வளவு வருத்தம் அடைகிறோம். ஆகவே, வாயில்லாப் பிராணிகளாகிய ஆடு மாடு கோழிகளை, அவை அம்மா வென்றலற வெட்டுதல் அவற்றுக்கு எவ்வளவு வேதனையைக் கோடுக்கும் எனபதைச் சிந்திக்க வேண்டாமோ.

## யாழ்ப்பாணத்தில் மிஸ்ரர் சேனநாயக்கா

இலங்கையின் விவசாய மந்திரியும் அரசாங்கசபை முதல்வருமான மிஸ்ரர் டி. எஸ். சேனநாயக்கா இப்போது யாழ்ப்பாணத்தில் நிற்கிறர். சென்ற புதன்கிழமையன்று காலை அவர் ஐக்கியசங்க மகாநாட்டை, யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் ஆரம்பித்துவைத்தார். நேற்று வியாழனன்று யாழ்ப்பாணம்-மலையாளப் புகையிலை ஐக்கியசங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்றிற் சமுகமளித்தார், அவர் இங்கே இன்னும் மூன்று தினங்கள்வரை தங்கிநிற்பர் என்றும், அக்காலத்தில் நிலாவரை முதலிய நீர்ப்பாய்ச்சல் திட்டங்களைப் பார்வையிடுவர் என்றும் தெரிகிறது.

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்ருள்; இவர் முதியவராகக் காணப்படுகிருரே, ஐம்பது ஐம்பத்தைந்து வயசுக்கு மேற்பட்டவரென்று மதிக்கலாம்; சாந்தகுணமுடையவர்போற் காணப்படுகிருர்; வயதுக்கேற்ற குணம் நடை இருக்குந்தானே என்றேன்; "சின்னம்மா, வயசைப்பற்றி நீங்கள் கொண்ட உத்தேசம் தவறுகும்: இவருக்கு அறுபத்தைந்து எழுபது வரையிலிருக்க வேண்டும்: இவர் தன் மீசைக்குக் கறுப்புமை பூசியிருக்கிருர்; இவர் தலைப்பாகையைக் கழற்றிவிட்டால் தலையில் மயிர் பஞ்சு நிறைந்த பெட்டி போற் காணப்படும்: இவருடையபற்களெல்லாம் பிந்திக் கட்டியமைத்த தந்த வரிசையம்மா; அதிகஞ் சொல்வதென்ன, நான் இந்த வீட்டிற்கு வந்து நாலைந்து வருடங்களாகின்றன; அந்த நாள்தொடக்கம் இற்றைவரையில் எங்கள் ஐயரை யாரும் ஊரதிகாரியின் வயசு என்னவென்று கேட்கநேர்ந்தால், நாற்பத்தைந்தென்றே சொல்லிக்கொண்டு வருகிருர்; அம்மா, இவர் தம்முடைய முதுமையைச் செயற்கையால் இளமையாக்கப் பார்க்கிருர்; இவரோடு அவதானமாக ஊடாட வேண்டும்" என்று சொன்னுள்;

### "தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்து...."

யாழை நான்எடுத்து இலட்சுமிகையிற் கொடுத்துமுன்போக அவள்அதனையும்கொண்டு பின்வந்துநான் பழையபடிகம்பலத்திலிருக்க,அவள் யாழை என்னிடந் தந்துவிட்டுப் பின்புறத்தே நின்ருள்' எங்கள் வீட்டுக்கார ஐயர் என்னைப்பார்த்து "இவர்கள் கேட்டு மகிழும்படி கூசாமற் பாடு" என்று சொல்ல, "பாட்டனருக்கு முன்னே பாட எனக்கென்ன கூச்சம் ஐயா' என்றுசொல்லி யாழை மீட்டினேன்; "பாட்டனர்" என்று நான் சொன்னது ஊரதிகாரிக்குப் பிடிக்கவில்லை; அவர்முகம் சிறிது சுழித்தது "ஐயா, என்ன பாட்டுப்பாடக் கேட்கிறீர்களென்றேன்; ஊரதிகாரி பெருமூச்சுவிட்டு "ஒரு திருப்புகழ் வருமானுற் பாடும்பெண்ணே" என்ருர்; நான் உடனே,

'தலைமயிர்கொக்குக் கொக்கநரைத்துக்
கலகலெனப்பற் கட்டதுவிட்டுத்
தளர்நடைபட்டுத் தத்தடியிட்டுத்
தடுமாறி.
தடிகொடுதத்திக் கக்கல்பெருத்திட்
டசனமும்விக்கிச் சத்தியெடுத்துச்
சளியுமிகுத்துப் பித்தமுமூறிப்
பலகாலும்;
திலதயிலத்திட் டொக்கவெரிக்கத்
திரிபலைசுக்குத் திப்பிலியிட்டுத்
தெளியவடித்துற் றுய்த்துடல்செத்திட்
டுயிர்போமுன்
திகழ்புகழ்கற்றுச் சொற்களபயிற்றித்
திருவடியைப்பற் றித்தொழுதுற்றுச்
செனனமறுக்கைக் குப்பாமுத்திக்
கருள்தாராய்;
... ... ... ... ... ...

என அத்திருப்புகழ் முழுவதையம் பாடினேன்.

"என் பெண்ணே, வேறு திருப்புகழ் ஞாபகத்திலில்லையா" என்று அவர் கேட்க, உண்டு இதுதான் வாயில் வந்தது என்றேன்; அதிகாரி முகவாட்ட மடைந்தார்; ஆனலும் தம் முகவாட்டத்தை அதிகம் வெளியிற் காட்டாது மகிழ்ச்சி காட்டி, 'பெண்ணே உம்முடைய சங்கீதம் கேட்க இனிமையாயிருக்கின்றது; சங்கீதமும் ஒருவருக்குத் தானக வரவேண்டும்: உம்முடைய சாரீரம், சரீரம் இரண்டும் செவிக்கும் விழிக்கும் இதம்பயக்கின்றன: மேலும் நீர் செய்யும் பரதநாட்டியத்தையும் ஒருமுறை பார்த்து மகிழ விரும்புகிறேன்" என்ருர். நான் இன்னமும் பரதநாட்டியத்தை ஒருவர் முன்னிலையிற் செய்ததில்லையென்றேன்; இதற்கிடையில் எங்கள் வீட்டையர், "செய்யவுமில்லை, இப்பொழுது செய்யினும் பக்கவாத்தியம் ஆயத்தமாகவில்லை; இன்னுமொரு நாளைக்குப் பார்க்கலாம்" என்று சமாதானஞ் சொல்ல, ஊரதிகாரி கேட்டுக்கொண்டார்; இதற்கிடையில் இலட்சுமியைத் திரும்பிப் பார்த்தேன்: அவளைக் காணவில்லை; எங்கள் ஐயரும் மெல்ல அந்த இடத்தைவிட்டு நழுவினர்: நானும் எழுந்து போகமுயல, ஊரதிகாரி என்னை நோக்கி, 'உங்கள் ஐயா வரும்வரை இப்படி இருக்கலாம் பெண்ணே" என்று தன் பக்கலிலுள்ள 'ஸோபா'வில் இருக்கச் சொல்ல, இல்லை, தாத்தா, நான் இப்படி இருக்கிறேன் என்று சொல்லி இருந்த இடத்திலேயே யிருந்தேன்; "இப்படிவந்து இருக்க ஏன் கண்ணே இலச்சைப்படுகிறீர்" என்று அவர் கேட்க: உப்படி வந்திருக்க வேண்டுமென்று ஏன் தாத்தா ஆசைப்படுகிறீர்கள் என்று நான் கேட்டேன்; அப்படி வித்தியாசமாக ஒன்றுமில்லையென்று சொல்லி இருக்கைவிட்டெழுந்து சரேலென வந்து ஊரதிகாரி என் கையைப் பிடித்து இழுத்துத் தன் பக்கத்திற் கொண்டுபோயிருத்த முயன்ருர்.

(வரும்)

## சித்துப் பிரபஞ்சம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

காரணமாவதோர் சித்துப்பொருள உண்டெனக் கொள்ளுதலே யுக்திக்சமைந்தது என்றபடியாம்.

உலகத்திலே நன்மையைச் செய்தவர் நற்பயனையும் தீமை செய்தோர் தீப்பயனையும் தப்பாது அனுபவிப்பதைக் காண்கிறோம். சிலர் இப்பயனைச் சில சமயங்களிலே அனுபவியாது விலகிக்கொள்ளலாம். அவர்கள் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கின் எப்படியும் அப்பயன் அவர்களை வந்தடையக் காணலாம். ஆனல் எல்லா விதிக்கும் ஓர் விலக்குண்டு. இவ் விலக்கால் விதிப்பயன் இப்பிறப்பில் நிகழாமலும் போகலாம். பொதுப்பட நோக்குமிடத்து நல்வினை தீவினைப் பயன்கள் அவ்வவரை அவ்வப்போது வந்து சேர்தல் பிரத்தியக்ஷப் பிரமாணம். இந் நியதிக்குக் காரணர் யாவர்? அரசரா? சனசமூகமா? ஒருவர் செய்துகொண்ட வினைகள்தான் அவ்வப் பயனுக்குக் காரணமாகுமெனின் வினைகள் சடப்பொருள்கள்; அவை ஒருவரது ஆஞ்ஞையின்றி ஒரு பயனை உரியவர்க்குத் தேடி அடைவிக்கும் ஆற்றல் உடையவையல்ல. இப்பயனை அடைவிக்கும் கடவுளர் ஒருவர் உளர் என்பது போதரும.

கடவுள் ஒருவர் உளரென்று நம்பி அவருக்கு பததிசெய்து அவரை வழிபடுஞ் சனங்களெல்லாம் தாம் தாம் விரும்பிய இஷ்டசித்திகளைப் பெறுகின்றனர் அவ் வழிபாட்டை ஏற்பாரில்லையாயின் அதன்பயனக இஷ்டசித்திகள் அவரை எப்படி வந்தடையும்? இப்பயன்கள் சித்திப்பதெல்லாம் வழிபடுவோரது நம்பிக்கை காரணமா என்று கூறுவோமாயின் பெருமுயற்சியாற் சிந்திக்காத பயன் வழிபாட்டினல் வந்தெய்துவதைக் காண்கின்றோம். இதைத் தேவானுக்கிரகம் என்று கூறுப. இத் தேவானுக்கிரகம் சில க்ஷேத்திரங்களிலேயும் மூர்த்தங்களிலேயும் தீர்த்தங்களிலேயும் விசேட அனுக்கிரகம் சாதிப்பது அனுபவத்திற் காணத்தக்கது.

---

பண்டிதர்

ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையின்

## அறுபதாமாண்டு நிறைவு விழா நிதி

இந் நிதிக்குப் பணமுதவுவோரின் பெயர், விலாசம், பணத்தொகை முதலியன:-

திருவாளர்கள்:

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| 1 | சித. மு. ப, சிதம்பரநாதச்செட்டியார் வண்ணார்பண்ணை | 50 | 00 |
| 2 | சி ச குமாரசுவாமி, ஸ்ரீ சண்முகநாதன்புத்தகசாலை ,, | 100 | 00 |
| 3 | N தெய்வேந்திரம், ஸ்ரீலங்கா புத்தகசாலை வண்ணார்பண்ணை | 50 | 00 |
| 4 | சி. பசுபதிச்செட்டியார் வண்ணார்பண்ணை | 25 | 00 |
| 5 | சு. கனகசபை, சிறுப்பர் ஐக்கியலாபநிதி வண்ணார்பண்ணை | 25 | 00 |
| 6 | அ கனகசபாபதி வண்மேற்கு | 25 | 00 |
| 7 | கா. கந்தையா, இளைப்பாறிய வித்தியாதரிசி வண்மேற்கு | 15 | 00 |
| 8 | மு. மயில்வாகனம், ஆசிரியர் இந்துக்கல்லூரி | 15 | 00 |
| 9 | S. தில்லையம்பலம், Town Overseer வண்ணார்பண்ணை | 15 | 00 |
| 10 | K. A கனகசபை, சிவன்கோவிலடி வண்ணார்பண்ணை | 25 | 00 |
| | ஆக | 345 | 00 |

மேற்படி பண்டிதரவர்களின் மாணக்கர்கள் அபிமானிகளாயுள்ளாரனைவரும் இந் நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்ற பணம் உதவுக' மேலும் பணம் உதவும் அன்பர்கள் தம் பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி மேற்படி நிதித் தனதிகாரியவர்கள் விலாசத்திற்கனுப்புக.

கா. கந்தையா, தலைவர்.
க. சி. சுப்பிரமணியம், காரியதரிசி.
அ. கனகசபாபதி, தனதிகாரி,
ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச்சபை.

Mis 131 26-7-46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடைமார்க்ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

## கலிக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினல் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினல் உடையாது. மழையினல் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செதய் ஆராய்ச்சியின் பயனுவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஏஜென்ஸ்'

ஜே. செருபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3— 12-9(வெ)

## தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தாவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46—25-10-46 (வெ)

# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவ, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)


## தென்னுபிரிக்காவில் இந்தியர் சத்தியாக்கிரகம்

தென்னுபிரிக்காவில் உள்ள வெள்ளையர் செய்துவரும் அநீதியைக் கண்டிப்பதற்காக அங்கு வசித்துவரும் இந்திய மக்கள் சத்தியாக்கிரகம் செய்துவருகின்றனர் சென்றவாரம் செய்த சத்தியாக்கிரகத்தில் 27 இந்தியர் சிறையாகியுள்ளனர்.

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

## சனி யூலை 27

காலை 7-15 தொரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வி கிரஷ்ண பர்த்திஐயர் வாலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 சிதம்பரம் ஜி அம்புஜவல்லி பாட்டு 8.30 சித்ரகானம 9 முடிவு.

1 வி கிருஷ்ணமூர்த்தி ஐயர் வாலின் 1-30 அங்கிலத்தில செய்திகள் 1-40 சர்வ சலசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள 2-05 எம் ஏ பார்வதி அம்மாள் பாட்டு 2-45 முடிவு.

மாலை: 5 எம் ஏ பார்வதிஅம்மாள் பாட்டு 5-40 தியற்றாவிளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சிதம்பரம் ஜீ அம்புஜவல்லிபாட்டு 7-15 புள்ளிவிவர புகர் பேச்சு 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி (பாருர் ள்ளி ராமகிருஷ்ணைய பக்தலு பாட்டு) 9 ஆங்கிலத்தில செய்திகள் 9-15 கே ஸி தியாகராசன் பாட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இலசவேளை 10 30 முடிவு.

## ஞாயிறு யூலை 28

காலை: 7-15 தொரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 காஞ்சிவரம் டி பச்சையப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 மறுங்குடி சுந்தரம் பாட்டு 8.30 இசைக்சதம்பம 9 முடிவு.

12 சதம்பம் 12-30 ஒலிமலர் 1-30 அங்கிலத்தில் செய்திகள் 1.40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 மறுங்குடி சுந்தரம பாட்டு 2-30 நீவகள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 காஞ்சிபுரம் எம் என் வெங்கடவரதன் பாட்டு 5-40 தேவாரத்தனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 615 கிராமநிகழ்ச்சிகள் 7 காஞ்சிவரம் டி பச்சையப்பா பாட்டு 7-15 ஆதாரமானவை பேச்சு 7-20 தமிழில் செய்திகள் 7-45 எம் கே வெங்கடாத்ரி பாகவதர் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 அறிவிப்புகள் வானிலை 9-20 ரேடியோ நாடக இசை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 டெல்லியில் உள்ளபடி 10-10 காஞ்சிபுரம் எம் என் வெங்கடவரதன் பாட்டு 10-30 முடிவு.

## திங்கள் ஜூலை 29

காலை 7-15 திகாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே பி தேவராசு சாக்ஸபோன் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருபழாடி இசைத்தொகுப்பு 8-30 பரூர் கே ராதாமணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பரூர் கே ராதாமணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பரூர் கே ராதாமணி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 திருவிழிமிழலை சுப்பிரமணிய பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6 45 தவில் வாத்ய கச்சேரி 7.30 தமிழில் செய்திகள் 7-45 ராஜ் சேவாநிரத செம்மங்குடி ஆர் ஸ்ரீனிவாச ஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள 9-15 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 டி எஸ் மரியானந்தம் பாட்டு 10 30 முடிவு.

## செவ்வாய் ஜூலை 30

காலை: 7-15 திாரம்பம 7-20 தமிழில் செய்திகள் 7-30 பரூர் பி ஸி பொன்னம்மா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் இசைத்தட்டு 8-30 டி கே ஜெகிரிசாம பிள்ளை புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள 1-40 புதுக்கோட்டை கே அப்துல் கரீம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 புதுக்கோட்டை கே அப்துல் கரீம் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை: 5 பரூர் பி ஸி பொன்னம்மா பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள 6-10 அறிவிப்புகள 6-15 கிராம நிகழ்ச்சிகள 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-15 அரங்க இலக்கணம் பேச்சு 7-30 தமிழில் செய்திகள் 7-45 அதிருஷ்டசாலி நாடகம் 8 கல்லிடைக்குறிச்சி எஸ் ஹரிஹரஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள 9.15 ஜே எம் அப்துல்கனி ஸிதார் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 நமதுசங்கீதம் 10.30 முடிவு.





எங்கும் கியாதிபெற்ற எமது

ரேடியோ பீடிகளையே

எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்: எல்லாஊர்களிலும் கிடைக்கும்
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)

## இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்

### வலிகாமம் - கிழக்குப்பகுதி

சைவ வித்தியா விருத்திச் சங்கக் [இந்துபோட்]
காரியதரிசியும், அப்புக்காத்துமாகிய
கோப்பாய்

### திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம்

அவர்கள்

புது அரசியல் திருத்தப்படி நிறுவப்படும் இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவர் பதவிக்கு ஓர் அபேட்சகராக முன்வந்திருக்கிறார்கள்.

பிரிவு: கீழே காட்டப்படும் கிராமச்சங்கப் பகுதிகள்

(1) அச்சுவேலி (2) புத்தூர், (3) உரும்பராய், ஊரெழு, நீர்வேலி (4 கோப்பாய், (5) நல்லூர் (6) கொக்குவில், கோண்டாவில்.

Mis 119 16—26

## படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பரீட்சைக்கும், ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு டி நூல் ஆசிரியர் அவர்கள் செய்த பல திருத்தங்களோடு


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்

வெளியீடாக அச்சிடப்படுகின்றது.

கூடியசீக்கிரம் வெளிவரும்

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை.

## மிகச் சிறந்த புதிய ஆர்மோனியங்கள்



விலக்கிருக்கின்றன

எந்த சீதோஷ்ண காலத்திலும் பாவிக்கலாம்

சங்கீதக் கருவிகள் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்

கல்கத்தா மோகன புளூட் ஆர்மோனியக் கொம்பனி,

484 K K S ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(Mis 98 28 6—28-9) வெ)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Jaffna, on Friday July, 26, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org